සියලු ම හිමිකම් ඇවිරිණි]
(முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

கணக்காய்வுப் பரீட்சகர் சேவையின் II ஆம் தரத்திலுள்ள உத்தியோகத்தர்களுக்கான
வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை - 2016 (II) (2018)

Efficiency Bar Examination for Officers in Grade II of Audit Examiner Service - 2016 (II) (2018)

(01) கணக்கியல்
Accountancy

மூன்று மணித்தியாலங்கள்
Three hours

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

1. (i) பின்வருவன விவசாயம் சார்ந்த விற்பனைகள் கூட்டுத்தாபனத்தின் கணக்குகளில் இருந்து 31.12.2017 இல் உள்ளவாறான மீதிகள் ஆகும்.

| | ரு. (000) |
|---|---|
| மூலதனம் | 70 000 |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 54 000 |
| கடன்கொடுத்தோர் | 16 000 |
| வாகனங்கள் | 16 000 |
| விற்பனை வருமானங்கள் | 140 000 |
| சரக்கிருப்பு | 14 000 |
| விற்பனைக் கிரயம் | 100 000 |
| காசு மற்றும் வங்கி மீதிகள் | 6 000 |
| கடன்பட்டோர் | 18 000 |
| நீண்டகாலக் கடன்கள் | 16 000 |
| வருமான ஒதுக்கங்கள் | 2 000 |
| நிர்வாகச் செலவுகள் | 16 000 |
| வரிச் செலவுகள் | 2 000 |
| நிதிச் செலவுகள் | 4 000 |
| விற்பனை விநியோகச் செலவுகள் | 14 000 |

இலங்கைக் கணக்கீட்டு நியமம் - 3 இற்கு இணங்க 31.12.2017 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக் கூற்றையும் அத்திகதியில் உள்ளவாறான ஐந்தொகையையும் தயாரிக்குக. *(20 புள்ளிகள்)*

(ii) மேலே தரப்பட்ட கணக்கு மீதிகளைப் பயன்படுத்தி பின்வரும் விகிதங்களைக் கணிக்குக.

(அ) மொத்த இலாப விகிதம்

(ஆ) தேறிய இலாப விகிதம்

(இ) நடைமுறை விகிதம்

(ஈ) மூலதன இணைப்பு விகிதம் (Gearing Ratio)

(உ) விரைவு விகிதம் (Quick Ratio)

*(10 புள்ளிகள்)*

[பக். 2 ஐப் பார்க்க

**2.** (i) இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டத்தைச் சுருக்கமாக விளக்குவதுடன் இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறு நியமங்களைப் பயன்படுத்தி, வருடாந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதன் **ஐந்து** நோக்கங்களைக் குறிப்பிடுக. *(15 புள்ளிகள்)*

(ii) அரசாங்க கூட்டுத்தாபனங்களின் வருடாந்த வரவு செலவுத் திட்டம் மற்றும் வருடாந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதிலும் முன்வைத்தலிலும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளைத் தருக. *(15 புள்ளிகள்)*

**3.** (i) அரசாங்கத் திணைக்களம் / அமைச்சு ஒன்றின் வருடாந்த ஒதுக்கீட்டு கணக்கைத் தயாரிப்பது வரையிலான பிரதான செயன்முறையில் அது தொடர்பாகப் பயன்படுத்தும் கணக்குகள், ஏடுகள் மற்றும் பதிவுகள் உள்ளடங்கலான செயன்முறைகளை விளக்குக. *(15 புள்ளிகள்)*

(ii) அரச திணைக்களம் / அமைச்சு ஒன்றின் அரச அலுவலர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பாக வருடாந்த இணக்கக்கூற்றினைத் தயாரிப்பது வரையிலான பிரதான செயன்முறையை அது தொடர்பாகப் பயன்படுத்தும் கணக்குகள், ஏடுகள் மற்றும் பதிவுகள் உள்ளடங்கலாக விளக்குக. *(15 புள்ளிகள்)*

**4.** (i) "மீள் நிரப்பத்தக்க வெளிநாட்டு உதவிகள்" என்பதனை விளக்குவதுடன், அது தொடர்பாக முன்வைத்துள்ள விரிவான செலவுகள் கூற்றிலும் செலவுகள் தொடர்பான சுருக்கத்திலும் உள்ளடக்க வேண்டிய தரவுகள் / தகவல்களைக் குறிப்பிடுக. *(16 புள்ளிகள்)*

(ii) நிகழ்ச்சித்திட்ட பாதீட்டு முறைமையிற்கு ஏற்ப ஒரு செலவுப் மதிப்பீட்டைத் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் பிரதான வகைப்படுத்தல் அலகுகள் **நான்கைச்** சுருக்கமாக விளக்குக. *(14 புள்ளிகள்)*

**5.** சிறுகுறிப்புக்கள் எழுதுக.

(i) மாகாண சபை நிதியம்

(ii) திணைக்கள ஒதுக்கீட்டுக்கு மேலான மிகை (Excess on votes of the department)

(iii) மாநகர சபை நிதியம்

(iv) களஞ்சிய முற்பணக் கணக்கு

(v) மீளப்பெறப்படாத வருமான அறிக்கைகள் *(06 × 5 = 30 புள்ளிகள்)*

* * *

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
(முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

**கணக்காய்வுப் பரீட்சகர் சேவையின் II ஆம் தரத்திலுள்ள உத்தியோகத்தர்களுக்கான**
**வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை - 2016 (II) (2018)**
Efficiency Bar Examination for Officers in Grade II of Audit Examiner
Service - 2016 (II) (2018)

**(02) கணக்காய்வு**
Auditing

**மூன்று மணித்தியாலங்கள்**
Three hours

**எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.

---

**1.** (i) விளக்குக.

(அ) நிதிக் கணக்காய்வு *(10 புள்ளிகள்)*

(ஆ) செயற்றிறன் கணக்காய்வு *(10 புள்ளிகள்)*

(ii) பொது நிறுவனங்களது பார்வையில் செயற்றிறன் கணக்காய்வின் முக்கியத்துவத்தை கலந்துரையாடுக. *(10 புள்ளிகள்)*

**2.** (i) கணக்காய்வாளர் நாயகத்தினால் வழங்கப்படும் கணக்காய்வு விசாரணைகள் தொடர்பில் நிதிப் பிரமாணங்களின் ஏற்பாடுகள் எவை? *(15 புள்ளிகள்)*

(ii) பொதுக் கணக்குகள் மீதான செயற்குழுவின் (COPA) வகிபாகத்தைச் சுருக்கமாக விளக்குக. *(15 புள்ளிகள்)*

**3.** (i) அரசாங்கத் திணைக்களம் ஒன்றுக்குள்ளே சரக்கிருப்புக் கட்டுப்பாட்டுக் கணக்காய்வு தொடர்பில் நீர் பரிசோதிக்க வேண்டிய **பத்து** உருப்படிகளைக் குறிப்பிடுக. *(15 புள்ளிகள்)*

(ii) அரசாங்க ஆதனம் ஒன்றின் சேதம் / நட்டம் தொடர்பில் கவனத்திற் கொள்ள வேண்டிய **பத்து** விடயங்களைக் குறிப்பிடுக. *(15 புள்ளிகள்)*

**4.** பொதுக் கூட்டுத்தாபனம் தொடர்பாக ஒன்றுக்கான பின்வரும் விடயங்கள் தொடர்பில் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளைக் குறிப்பிடுக.

(i) குறித்த அமைச்சரால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்களுக்கான தேவை *(10 புள்ளிகள்)*

(ii) அரசாங்கக் கூட்டுத்தாபன கணக்காய்வில் கணக்காய்வாளர் நாயத்தினால் அறிக்கைகள் வெளியிடப்படல் *(10 புள்ளிகள்)*

(iii) வருடாந்த வரவுசெலவு திட்டம் *(10 புள்ளிகள்)*

**5.** சிறுகுறிப்புக்கள் எழுதுக.

(i) கணக்கீட்டு விகிதங்கள்

(ii) கணக்காய்வு இடர்

(iii) ஐந்தொகைத் திகதிக்கு பிந்திய நிகழ்வுகள்

(iv) முறைமை அணுகுமுறை (Systems Approach)

(v) கணக்காய்வாளர் நாயகத்தினால் மேலதிக கட்டணங்கள் விதிக்கப்படல் *(06 × 5 = 30 புள்ளிகள்)*

* * *

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

**கணக்காய்வுப் பரீட்சகர் சேவையின் II ஆம் தரத்திலுள்ள உத்தியோகத்தர்களுக்கான**
**வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை - 2016 (II) (2018)**

Efficiency Bar Examination for Officers in Grade II of Audit Examiner
Service - 2016 (II) (2018)

**(03)** நிதி நடைமுறை
Financial Procedure

இரண்டு மணித்தியாலங்கள்
Two hours

**எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.

---

**1.** நி.பி. 152 இல் குறிப்பிடப்பட்டவாறு, நிலையான கட்டளை இலக்கம் 125 இன்படி உருவாக்கப்பட்டுள்ள பொது கணக்குகள் குழுவின் செயற்பாடுகளையும் மற்றும் அதன் அமைப்பினையும் குறிப்பிடுக. *(14 புள்ளிகள்)*

**2.** நி.பி. 126(3) இன்படி, பொது திறைசேரியின் கட்டுப்பாடு மற்றும் மேற்பார்வைச் செயற்பாடுகளைக் குறிப்பிடுக. *(14 புள்ளிகள்)*

**3.** வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட காசோலை மறுக்கப்பட்டதாக வங்கி ஒன்று அறிவிக்கும்போது நி.பி. 189 இன்படி, எடுக்கவேண்டிய படிமுறைகள் எவை என்பதனைக் குறிப்பிடுக. *(14 புள்ளிகள்)*

**4.** 1971 நிதிச் சட்ட இலக்கம் 38 இன்படி, பொதுக்கூட்டுத்தாபனங்களின் வருவாய் பெறுவனவு மூலங்களையும், அவ்வருமானத்தைச் செலவு செய்யும் முறையையும் குறிப்பிடுக. *(14 புள்ளிகள்)*

**5.** நி.பி. 65(2) இன்படி, முறையான அனுமதியின்கீழ் வருடாந்த ஒதுக்கீட்டுச்சட்ட ஏற்பாட்டினை மாற்றமுடியும். எவ்வாறான சூழ்நிலைகளில் இம்மாற்றத்திற்கான அனுமதி வழங்கப்படுகின்றது? *(14 புள்ளிகள்)*

**6.** (i) அரச திணைக்களத்தில் பணம் முதலியவற்றின் கட்டுக்காப்புக்குரிய அலுவலர் ஒருவர் செய்யத் **தகாத** செயற்பாடுகள் **ஐந்தினைக்** குறிப்பிடுக. *(10 புள்ளிகள்)*

(ii) நி.பி. 108 இன் படி நட்டங்களைக் கையாள்வதற்கு அதிகாரம் அளிக்கும் **மூன்று** அலுவலர்களைக் குறிப்பிடுக. *(06 புள்ளிகள்)*

**7.** ஆண்டு வரைவு மதிப்பீட்டினைத் தயாரிக்கும்போது கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்களை தெளிவுபடுத்துக. *(14 புள்ளிகள்)*

* * *

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

**கணக்காய்வுப் பரீட்சகர் சேவையின் II ஆம் தரத்திலுள்ள உத்தியோகத்தர்களுக்கான**
**வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை - 2016 (II) (2018)**

Efficiency Bar Examination for Officers in Grade II
of Audit Examiner Service 2016 (II) (2018)

**(04)** தாபன நடைமுறை
Establishments Procedure

இரண்டு மணித்தியாலங்கள்
Two hours

**முதலாம்** வினா உட்பட **ஐந்து** வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

1. பின்வரும் விடயங்கள் தொடர்பாக தாபனவிதிக் கோவைக்கேற்ப சுருக்கக் குறிப்பு எழுதுக.
   (i) ஒழுக்காற்று அதிகாரி
   (ii) தனிப்பட்ட கருமங்களுக்கு அரசாங்க நிதியைப் பயன்படுத்தல்
   (iii) இரவல் மோட்டார் வண்டிகளைப் பயன்படுத்தல்
   (iv) கடந்த கால லீவினைப் பெற்றுக்கொள்ளல்
   *(05 × 4 = 20 புள்ளிகள்)*

2. (i) அரசாங்க உத்தியோகத்தர் எனக் கருதப்படுபவர்கள் யார் எனக் குறிப்பிட்டு, அரசாங்க உத்தியோகத்தர் வகுதிக்குள் **அடங்காத** உத்தியோத்தர் குழுக்கள் **எட்டினைப்** பெயரிடுக. *(10 புள்ளிகள்)*
   (ii) ஆட்சேர்ப்புத் திட்டம் என்றால் என்ன என்பதை விளக்கி, ஆட்சேர்ப்புத் திட்டத்தில் அத்தியாவசியமாக உள்ளடக்கப்பட வேண்டிய அடிப்படை விடயங்கள் சம்பந்தமாகக் குறிப்பெழுதுக. *(10 புள்ளிகள்)*

3. (i) அரசாங்க உத்தியோகத்தர் ஒருவரது சேவை மூப்பினைத் தீர்மானிக்கும் அடிப்படைக் காரணிகள் **பத்தினைப்** பெயரிடுக. *(10 புள்ளிகள்)*
   (ii) வரலாற்றுத்தாள் குறிப்பு என்பது என்னவென விளக்கி, வரலாற்றுத் தாளினைப் பேணிவர வேண்டிய முறையினையும் விளக்குக. *(10 புள்ளிகள்)*

4. (i) வருடாந்த இடமாற்றங்கள் தொடர்பாக திணைக்களத் தலைவரொருவர் கடைப்பிடிக்க வேண்டிய செயல் முறைகள் எவை என விளக்குக. *(10 புள்ளிகள்)*
   (ii) அரசாங்க உத்தியோத்தர்களுக்கான இடமாற்றச் சபையினால் குழுக்களினால் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய பொது நிபந்தனைகளையும் குறிக்கோள்களையும் விளக்குக. *(10 புள்ளிகள்)*

5. (i) அரசாங்க உத்தியோகத்தர் ஒருவரை அரசாங்க சேவையிலிருந்து தற்காலிகமாகவோ, நிரந்தரமாகவோ விடுவிக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் **பத்தினைப்** பெயரிடுக. *(10 புள்ளிகள்)*
   (ii) அரசாங்க சேவையிலிருந்து விடுவிப்பு செய்யுமாறு அரசாங்க உத்தியோத்தர் ஒருவர் விண்ணப்பிக்கும்போது நியமன அதிகாரியினால், அவ்விண்ணப்பத்தினை நிராகரிக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் **பத்தினைப்** பெயரிடுக. *(10 புள்ளிகள்)*

6. (i) அரசாங்க உத்தியோத்தர்கள் பெற்றுக் கொள்ளத்தக்க விசேட லீவு வகைகள் **பத்தினைப்** பெயரிடுக. *(10 புள்ளிகள்)*
   (ii) சில குறிப்பிட்ட நோய்களினால் பீடிக்கப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர்கள் பெற்றுக் கொள்ளத்தக்க விசேட சலுகைகள் எவை என விளக்குக. *(10 புள்ளிகள்)*

7. (i) உத்தியோபூர்வக் கடிதத்தில் உள்ளக்கப்பட வேண்டிய அத்தியாவசியமான விடயங்கள் **பத்தினைக்** குறிப்பிடுக. *(10 புள்ளிகள்)*
   (ii) குற்றஞ்சாட்டப்பட்ட அலுவலரொருவருக்கு வழங்கப்படும் குற்றச்சாட்டுப் பத்திரத்தில் கட்டாயமாக உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் யாவை? *(10 புள்ளிகள்)*

* * *